


## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| நீங்கள் கிறிஸ்துவின் சபை ... | 11 |
| பெண்கள் பகுதி | 15 |
| சிறுவர் பகுதி | 19 |
| உபதேசங்கள் தேவனுடையது | 21 |
| கொரோனா ... | 27 |
| நாங்கள் ஆராதிக்கிற ... | 30 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023
Published on 17/18 th of Every Month

## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

### வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.



Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 7 ஜூலை - 2021

தனிப்பிரதி ரூ.10/-

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 34 July- 2021 Issue - 7**


ஆசிரியர் உரை

## கைவிடவும், வெறுக்கவும் மாட்டேன்

எந்த ஒரு காரியத்தை வெளிப்படுத்தும்போதும் அதில் இரண்டு தரப்புக்குச் சம்பந்தம் இருக்கும். ஒரு தரப்பு காரியத்தை வெளிப்படுத்தும். மற்றொரு தரப்பு வெளிப்படுத்தப்படுவதைக் கேட்கும். ஒரு காரியத்தை வெளிப்படுத்தும்போது, அதை வெளிப் படுத்துகிறவர் யார் என்பதைப் பொறுத்து அதற்கான முக்கியத் துவம் அமையும். சம்பந்தப்பட்டவர் கனத்திற்கும், அதிகாரத்திற் கும், மரியாதைக்குமுரியவராக இருந்தால் அவரால் வெளிப் படுத்தப்படும் காரியங்களுக்கு அதற்கேற்ற அளவில் முக்கியத் துவம் கொடுக்கப்படும். மாறாக, அவர் ஒரு சராசரி மனிதனாக இருந்தால், அதற்குண்டான அளவில்தான் அவர் சொல்வது எடுத்துக் கொள்ளப்படும். இந்த யதார்த்தத்தை நாம் நம் சமுதாய அமைப்பின் பல நிலைகளில் கவனிக்க முடியும். இக்கருத்தின் அடிப்படையில்தான் இம்மாதத் தலைப்பை நாம் அணுக உள்ளோம்.

நமது தலைப்பில் **கைவிட மாட்டேன், வெறுக்க மாட்டேன்** என்னும் இரண்டு சொற்றொடர்களை நாம் கவனிக்க முடியும். **கைவிடுதல்** என்பதன் பொருள் **அரவணைப்பிலிருந்தும் பாதுகாப்பு வளையத்திலிருந்தும் ஒருவரையோ அல்லது ஒரு கூட்டத்தையோ வெளியேற்றுவது** என்பது. **வெறுத்தல்** என்பது **சம்பந்தப்பட்ட ஒருவரையோ அல்லது ஒரு கூட்டத்தையோ மறுபடியும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்ற கடினமான மன நிலைக்கு வருவது.** இஸ்ரவேலைப் பேர் செல்லி அழைத்த தேவனாகிய நான், அவர்களுடைய காரியத்தில் இந்த இரண் டையும் செய்ய மாட்டேன் என்னும் ஓர் உறுதிமொழியை

ஒரு கட்டத்தில் தந்துள்ளார். கவனியுங்கள். அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர் களைக் **கைவிடவும், வெறுக்கவுமாட்டேன். நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்** [லேவி 26:44]. இப்படியாக, வெளிப்படுத்தும் பரலோக தேவன், சத்தியபரராகவும், நீதிபரராகவும் இருக்கிற படியால் இக்கூற்றுக்கு நாம் அதீத முக்கியத்துவம் கொடுக்க முடியும். ஏனெனில், வாக்கை நிறைவேற்றும் வல்லமை கொண்டவராக சர்வ வல்லவர் இருக்கிறார்.

சரி, நம்பிக்கையூட்டும் இவ்வார்த்தைகளைத் தேவன் யாரிடம் சொன்னார், எப்பொழுது சொன்னார், எங்கு சொன்னார் என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ள நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணிக்குள் கடந்து வருவோம்.

பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஐந்து ஆகமங்களில் மத்திய நூலாக இருப்பது லேவியராகமம். யாக்கோபின் 12 குமாரர்களுள் மூன்றாம் குமாரனான லேவியின் வம்சத்தோடு இந்நூல் சம்பந்தம் கொண்டுள்ளது. வேத வல்லுநர்கள் இந்நூலை ஒரு **வழிகாட்டும் நூல்** என்று ஏற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக, யெகோவா தேவனை **எப்படித் தொழுதுகொள்ள வேண்டும்** என்பதற்கான வழிமுறைகள் இதிலே அடங்கியுள்ளது. இந்நூலின் காரியங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி செங்கடலைக் கடந்து **சீனாய் மலை அடிவாரத்தில்** முகாமிட்டிருந்த போது வெளிப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு புதிய நிலைக்கு வந்து சேர்ந்துள்ள இஸ்ரவேலர்களுக்கு தேவனை மையப்படுத்தின வாழ்க்கை அவசியமாயிற்று. ஆனால், அது எப்படி என்பதற்கான எவ்விதப் புரிதலும் இவர்களுக்கு இல்லை. ஆகவே, தேவனை மையப் படுத்தின ஆன்மீக வாழ்வுக்கான பல காரியங்கள் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டது. குறிப்பாக, பக்திக் காரியங்களைத் தெரிந்து கொண்டு, அவைகளை நடைமுறைப்படுத்தும் ஆசாரியர்களுக்கான பொறுப்புகளும், கடமைகளும் என்ன என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்களுக்கான வெளிப்பாடுகள் இந்நூலில் பிரதானமாக இருக்கிறபடியாலும், அந்த ஆசாரியர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும் இந்நூலுக்கான பெயர் **லேவியர்** ஆகமம் என்பது பொருத்தமாக உள்ளது. இந்நூல் வெறுமனே ஆசாரியர்களுக்கானவைகளை மாத்திரம் கொண்டிராமல், ஏனைய ஜனங்களுக்கான ஆலோசனைகளையும் உள்ளடக்கி யுள்ளது. குறிப்பாக, தேவனுக்குக் கீழ்ப்படிவது சம்பந்தமாக, அதிலும் குறிப்பாகப் **பரிசுத்த வாழ்வு** சம்பந்தமாக பல கருத்துக்கள்

இடம் பெற்றுள்ளது. குறைந்தது 87 இடங்களில் பரிசுத்தம் பற்றிய குறிப்பு எதாவது ஒரு வகையில் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. லேவி 19:2 ஐ கவனியுங்கள். **நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று.** இதே கருத்தைப் புதிய ஏற்பாட்டில் பேதுரு அப்போஸ்தலன் ஆவியானவர் மூலமாக இப்படியாக வெளிப்படுத்துவார். உங்களை அழைத்தவர் பரிசுத்த ராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும், பரிசுத்தராயிருங்கள் என்று [I பேதுரு 1:15]. ஆக, பழைய ஏற்பாடாக இருந்தாலும், புதிய ஏற்பாடாக இருந்தாலும் பரிசுத்த வாழ்வு தேவனாலே அவருடைய ஜனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உண்மையை நம் அடிமனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய தலைப்பு இடம்பெற்றுள்ள லேவியராகமம் 26 – ம் அதிகாரத்திற்கும், உபாகமம் 28ம் அதிகாரத்திற்கும் ஓர் அலாதி யான ஒற்றுமை உண்டு. இரண்டுமே தேவ ஜனங்களுக்கானது தான். அதே வேளையில், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. லேவி யராகமத்து வெளிப்பாடு சீனாய் மலை அடிவாரத்திலும், உபாகம நூலின் வெளிப்பாடு **மோவாபின் சமவெளியிலும்** கொடுக்கப்பட் டுள்ளது. சீனாய் மலை அடிவாரத்திருந்தவர்கள் எகிப்திலிருந்து வந்த அடிமை இஸ்ரவேலர்கள். இவர்கள் கானானை நோக்கிய பயணத்தில் தேவ விரோத காரியங்களால் வனாந்திரத்தில் விழுந்து போனார்கள். மோவாபிற்கு வெளியில் முகாமிட்டிருந்த இஸ்ர வேலர்கள் **வனாந்திரத்தில் பிறந்து வளர்ந்த இரண்டாம் தலை முறை இஸ்ரவேலர்கள்.** இந்த இரண்டு அதிகாரங்களிலும் தேவன் அவருடைய ஜனங்களுக்கான ஆசீர்வாதத்தை நிபந்தனைகளுடன் வாக்களித்துள்ளார். இங்கு மாத்திரமல்ல, வேதாகமம் முழுவதிலும் தேவன் ஆசீர்வாதத்தை அவருடைய பிள்ளைகளுக்கு வாக்களிக்கவே செய்துள்ளார். ஏனெனில், **இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது அவருக்குப் பிரியமான ஒன்று** [**எண். 24:1**]. ஆயினும், நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளா விட்டால் ஆசீர்வாதக் குறைவிற்கும் அதே தேவன் காரணமாகி விடுகிறார்.

இந்த தேவன்தான், லேவியராகமம் 26 ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், உங்கள் கர்த்தராகிய எனக்கு முன்பாக நீங்கள் ஏன் **பயபக்தியாய்** நடக்கவேண்டுமென்ற காரணத்தை எடுத்துரைத்து விட்டு, **நீங்கள் செய்தால், செய்யாவிட்டால்** மற்றும் **மனந்திரும்பினால்** என்ன நடக்குமென்று ஒரு மூன்று "**ஆல்**" களை எடுத்து விளக்கிவிட்டு, இறுதியில் உங்கள் தேவனாகிய

கர்த்தராகிய நான் **கைவிடவும், வெறுக்கவுமாட்டேன்** என்று உறுதி கூறியுள்ளார். நம்முடைய தேவன் நம்மைக் கைவிடா மலும், வெறுக்காமலுமிருக்க நாம் ஒவ்வொருவரும் ஆசைப் படுகிறபடியால், இந்த "**ஆல்**"கள் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I. ... செய்தால் ஆசீர்வாதம்

கைவிடவும், வெறுக்கவுமாட்டேன் என்று சொல்லும் கர்த்தர் இங்கு நமக்குக் கொடுக்கும் முதல் பாடம், கர்த்தரின் கட்டளை களின்படி செய்தால் கர்த்தரின் ஆசீர்வாதம் உண்டு என்பது.

லேவியராகமம் 26:4–13 வசனம் பகுதியில் தேவன் ஒரு பதினெட்டு வகையான ஆசீர்வாதங்களை வாக்குக் கொடுப்பதற்கு முன், அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்று பாருங்கள். நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து என் கற்பனை களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால்..., (26:3), அதாவது, கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், மழை இருக்கும், பாதுகாப்பு இருக்கும், கனி கிடைக்கும், திருப்தி இருக்கும், பழம் இருக்கும், சமாதானம் இருக்கும், பாதுகாப்பு இருக்கும், வெற்றி இருக்கும், விருத்தி இருக்கும் என்று ஆசீர் வாதங்களை அடுக்குவதோடு அனைத்துக்கும் முத்தாய்ப்பாக **நான் உங்கள் நடுவிலே உலாவி உங்கள் தேவனாயிருப் பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்** என்று (26:12) சொல்லுவதோடும் நிற்காமல், அவர்கள் என்றென்றும் நினைவில் கொள்ள வேண்டிய ஓர் உண்மையை அழுந்தக் கூறுகிறார். ஆம்,.. **உங்கள் நுகத்தடிகளை முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று (26:13).**

ஆக, பரலோக தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவிப்பதற்கான ஒரே வழி, அவர் கற்பனைகளுக்குக் கீழ்ப் படிந்து அவைகளின்படி செய்வது தான். கீழ்ப்படிதலை அற்பமாய் எண்ணின இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலுக்குத் தேவன் சாமுவேலைக் கொண்டு இவ்விதமாய் இடித்துரைத்தார். **அதற்கு சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க் கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும், கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்கன், நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்** என்று (I சாமுவேல் 15:22). நம்முடைய வாழ்வில் நாம் ஆசீர்வாதத்தின் பிள்ளைகளாய் இம்மையிலும், மறுமையிலும் இருப்பதற்கு தேவச் சொல்லுக்கும், தேவச் சித்தத்திற்கும் நாம் எப்பொழுதும் கீழ்ப்படிகிறவர்களாய் இருப்பது அவசியம்.

இஸ்ரவேல் ஜனங்களிடம் கீழ்ப்படிதலை எதிர்பார்த்த தேவன், அந்த எதிர்பாப்பிற்கான காரணத்தையும் சொல்லிவிட்டார். **உங்கள் நுகத்தடிகளை முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்** என்று. பழைய ஏற்பாட்டின் காலத்தில் எகிப்தியர்களால் சுமத்தப்பட்ட சரீர நுகத்தடிகளை முறித்து, தமது ஜனமாகிய இஸ்ரவேலை நிமிர்ந்து நடக்கப்பண்ணின தேவன், புதிய ஏற்பாட்டில் யாரெல்லாம் அவருடைய பிள்ளைகளாக, இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின்படி மாறினார்களோ அவர்கள் அனைவரின் மீதும் சாத்தான் சுமத்தியிருந்த நுகத்தடியை முறித்து, ஆவிக்குரிய ரீதியாக அவர்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணியிருக்கிறார். இது குறித்து பவுலடியார் எபேசியருக்கு எழுதும் போது, **அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முதற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும் கீழ்படியாமையின் பிள்ளைகளினிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்** என்று விளம்பியுள்ளார் [எபே:2:1-2,4,5].

அருமையானவர்களே! ஆவிக்குரிய ரீதியில் நம்மை நிமிர்ந்து நடக்கப் பண்ணியிருக்கிற தேவனுக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாய் உள்ளோம்? பவுலடியார் பிலிப்பியாருக்கு எழுதும்போது, சிலுவையின் மரணபரியந்தம் இயேசு தம்மைக் கீழ்ப்படுத்தினபடியால், தேவன் இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார் என்று வெளிப்படுத்தியுள்ளார் [பிலி.2:8,9]. அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிற நாம் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் முற்றிலும் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டுக்கு நம்மைச் ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிய வேண்டும். இப்படி நாம் நம்மை ஆவிக்குரிய ரீதியாக நிமிர்ந்து நடக்கப் பண்ணின தேவனுக்கு சத்தியத்தின்படி வாழ்வோமானால், அவர் ஒரு போதும் நம்மைக் கைவிடமாட்டார், வெறுக்கமாட்டார்.

II **...செய்யாமற்போனால் ஆசீவாதம் இல்லை.**

கைவிடவும், வெறுக்கவுமாட்டேன் என்று சொல்லும் கர்த்தரால் நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், கர்த்தரின் கட்டளைகளை மீறி நடந்தால், ஆசீர்வாதங்கள் இல்லை என்பது.

லேவியராகமம் 26-ம் அதிகாரத்தின் 14-39 வசனங்கள் அடங்கிய பகுதியை வாசிக்கும் போது இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். ஆசீர்வாதங்கள் பற்றிய பகுதியை ஆரம்பிக்கும் போது, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது குறித்து பேசின தேவன், ஆசீர்வாதக் குறைவு பகுதியைத் தொடங்கும் போது, அவருடைய கட்டளைகளை மீறுவது குறித்துப் பேசியுள்ளார். பாருங்கள், **நீங்கள் எனக்குச் செவி கொடாமலும், இந்தக் கற்பனை எல்லா வற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து உங்கள் ஆத்துமா என் நியாயங் களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப் போடுவீர்களாகில்** (26:14,15) என்று எடுத்துரைத்து விட்டுத் தான், அதன் விளைவாக அவர்கள் கண்களை பூத்துப் போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும் திகிலையும், ஈளையையும், காய்ச்சலையும் வரப்பண்ணுவேன் என்று ஆரம்பித்து எதிரான காரியங்கள் குறித்த ஒரு பெரிய பட்டியலை வெளிப்படுத்துகிறார் (15-39). இதைப் படிப்பதற்கே பாரமாக இருக்கிறது.

ஆசீர்வாதத்திற்கும், ஆசீர்வாதக் குறைபாட்டிற்கும் வேறு பாட்டை உங்களால் காண முடிகிறதா? இருதய மகிழ்ச்சிக்கும், இருதய துயரத்திற்கும் வேறுபாடு புரிகிறதா? இதைப் புரிந்து கொள்ளப் பெரிய மேதாவித்தனம் எதும் தேவையில்லை. அப்படித்தானே! அவர் இட்ட எல்லாக் கட்டளைகளுக்குச் செவிக் கொடுத்து கீழ்ப்படிவதற்கும், அவருடைய கட்டளைகளை வெறுத்து, அரோசித்து, மீறிப்போடுவதற்கும் உள்ள வேறுபாடு தான் அது. தேவ ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்று, தேவக் கரத்தால் தாங்கி வழிநடத்தப்பட வேண்டுமென்கிற நாம் இந்த இடத்தில் நின்று நம்மை நிதானிக்க வேண்டும்.

ஆசீர்வாதக் குறைவு பற்றிய பகுதியில் ஆரம்பத்தில் இரண்டு கவனிக்கத்தக்க சொற்றொடர்கள் உண்டு. **செவிகொடாமல், எல்லாவற்றின்படி செய்யாமல்** இந்த இரண்டும் தான் நம்மை தேவனிடமிருந்து பிரித்து, ஆசீர்வாதக் குறைவுள்ளவர்களாக மாற்றிவிடுகிறது. செவி கொடுத்தலின் அவசியத்தை சபைச் சரித்திரத்தின் முதல் பிரசங்கத்தில், அதாவது 3000 பேரை இரட்சித்த பிரசங்கத்திலேயே நாம் பார்க்க முடியும் ஆம், பேதுரு அப்போஸ்தலன் பதினொருவரோடுங்கூட எழுந்து நின்று அம் மகாப்பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போதே, யூதர்களே, எருசலேமின் ஜனங்களே... என் வார்த்தைகளுக்குச் **செவி கொடுங்கள்** என்றே ஆரம்பித்தார். தேவனுடைய வார்த்தைகளின்படி செய் வதற்கான முதல்படி அவைகளுக்குச் செவி கொடுப்பது தான்.

தேவக் காரியங்களில் இப்படிச் செவிகொடுத்து கவனித்து விட்டு, சொல்லப்பட்டிருக்கும் எல்லாவற்றின்படி செய்வது அவசியம். அநேகராகிய நாம் செவி கொடுப்பதில் கூடப் பெரிதாகத் தவறு செய்வதில்லை. ஆனால், **கேட்ட எல்லா வற்றின்படி செய்வதில்** தவறிழைத்து விடுகிறோம். இம்மைக்கும், மறுமைக்குமான ஆசீர்வாதக் குறைவுக்கு இது காரணமாகிவிடுகிறது. யாக்கோபு ஆசிரியர், ஒன்றிலே தவறினாலும் எல்லாவற்றிலும் குற்றவாளி என்று கூறியுள்ளார் (யாக் 2:10) இந்த உண்மை பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத் தால் புரியப்படாமலிருக்கிறபடியால்தான், மார்க்க உலகில் இவ்வளவு குழப்பங்களும், பிரிவுகளும் காணப்படுகிறது.

ஆகையால் அருமையானவர்களே! ஆவியிலும், சரீரத்திலும் ஆசீர்வாதக் குறைவற்றவர்களாக வாழ்வதற்கு பூரணப் பிரமாண மாகிய (யாக் 1:25) கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு போதனை களுக்கும், அப்போஸ்தலர் உபதேசத்திற்கும் நம்மை எவ்வித பிசகுக்கும் இடமில்லாமல் முழுமையாகக் கீழ்ப்படுத்துவோம். அப்பொழுது அவர் நம்மைக் கைவிடவும், வெறுக்கவுமாட்டார்.

III ... **மனந்திரும்பினால் ஆசீர்வாதங்கள் திரும்பும்**

கைவிடவும், வெறுக்கவுமாட்டேன் என்று சொல்லும் கர்த்தரால் நமக்கு கிடைக்கும் இன்னுமொரு பாடம், தவறுகளை உணர்ந்து மனந்திரும்பினால் ஆசீர்வாதங்கள் திரும்பவும் கிடைக்கும் என்பது.

மனந்திரும்புதல் என்பது செய்த தவறுக்காக மனம் வருந்துவதோ, அதினிமித்தம் துக்கப்படுவதோ அல்ல. மாறாக, அப்படிப்பட்ட செயலைச் செய்ய மாட்டேன் என்று தீர்மானித்து தேவனிடத்தில் சரணடைவது. தம் சாயலில் பாவமில்லாமல் படைக்கப் பட்ட மனிதன் தன்னைப் போலவே பாவமற்றவனாக இருக்க இருக்கவேண்டுமென்பது தேவனுடைய எதிர்பார்ப்பாக இருந் தாலும், அவன் பாவம் செய்யும்போது தேவன் அவனை முழுமை யாக அழித்து விடுவதில்லை. அவன் செய்த மீறுதலுக்காக மனம் வருந்தி மீண்டும் தன்னண்டை வரவேண்டுமென்றே எதிர் பார்க்கிறார்.

லேவியர் ஆகம நூலில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வந்த முதல் முறை இஸ்ரவேலருக்கு இதைத்தான் வலியுறுத்து கிறார். தன் சொல்லுக்குச் செவிகொடுத்து கட்டளைகளுக்கு கீழ்ப் படிந்தால் ஆசீர்வாதம் என்றும், ஒருவேளை தான் இட்ட கட்டளை எல்லாவற்றுக்கும் கீழ்ப்படியாமல் போய் பாடுகளையும், வேதனை களையும் அனுபவிக்கும் போது, **செய்த மீறுதல்களை உணர்ந்து மனந்திரும்பினால் தப்பித்துக்கொள்ள முடியும்** என்கிறார். கவனியுங்கள், அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள்

பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுகிறதுமன்றி, அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால் நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டு போய் விட்டதையும் **அறிக்கையிட்டு,** விருத்த சேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால் **நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன்** [லேவி 26:40-42].

இப்பகுதியில் தேவ எதிர்பார்ப்பு என்ன என்பது விளங்குகிறதா? கர்த்தருடைய பிள்ளைகளாக நாம் இருந்தும் ஆசீர்வாதக் குறைவையும், சமாதானக் குறைவையும் நாம் கடந்து செல்லும்போது, அது தங்கள் தேவ விரோதச் செயல்களுக்கான தண்டனை என்று ஒத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஏதோ தேவன் தன் நீதியில் தவறிழைத்து விட்டாரோ என்று எண்ணத் துணிந்து விடக் கூடாது. நீதிபரராகிய தேவன் தன் நீதியிலிருந்து ஒருபோதும் பிசகமாட்டார். பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கனாகிய மல்கியா இதே கருத்தை இப்படியாகப் பதிவிட்டிருப்பதைப் பாருங்கள். **இப்போதும் தேவனுடைய சமூகத்தை நோக்கிக் கெஞ்சுங்கள்; அப் பொழுது நம்மேல் இரங்குவார்; இது உங்களாலே வந்த காரியம். அவர் உங்களை அங்கீகரிப்பாரோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்** என்று [மல்கியா 2:10]. நம்முடைய ஆசீர்வாதக் குறைவுக்கும், சமாதானக் குறைவுக்கும் தேவன் ஒருபோதும் காரணராகமாட்டார். எதுவாக இருந்தாலும் அது நம்மாலே வந்ததுதான்.

அன்பானவர்களே! நாம் ஒவ்வொருவரும் பாவமில்லாதவர்களாக இருக்க வேண்டுமென்பது தேவ எதிர்பார்ப்பு. ஒரு வேளை தேவப் பிரமாணத்தை மீறுவோமானால் நமக்கு இருக்கும் ஒரே வழி மனந்திரும்புதல்தான். ஒரு சமயம் கிறிஸ்துவின் உபதேசப்படி கிறிஸ்தவர்களாக மாறிய நிலையில், பணத்தாசைக் கொண்டு, தேவ வரத்தைப் பணத்தினால் பெற்றுவிட முயற்சித்துப் பாவத்துக்குள்ளானபோது, பேதுரு அப்போஸ்தலன் **ஆகையால், நீ உன் துரக்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்.....** [அப் 8:19-22] என்று கூறுகிறார்.

நாம் தேவனிடத்தில் மனந்திரும்பும்போது, அவர் நம்மை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கவும், தாங்கவும், வழிநடத்தவும், இம்மையின் ஆசீர்வாதங்களையும், மறுமையின் நம்பிக்கையையும் தர எப்பொழுதும் தயார். இந்த தேவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார், வெறுக்கமாட்டார். இவ்வுண்மைகளைப் புரிந்து நம் பக்தி வாழ்வை நடத்துவோமாக! ஆமென்!! ✝

# நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருக்கிறீர்களா?

Bro. J.C. சோட்

நான் இதுபற்றி உங்களிடம் பேசலாமா? இன்னும் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்காமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு வேளை நீங்கள் வேறு ஏதாவது சபையின் அங்கத்தினராக இருக்கலாம். அப்படியானால், அது யாருடைய சபை? நிச்சயமாக, அந்த சபையை கிறிஸ்துவின் சபையோடு ஒருக்காலும் ஒப்பிடவே முடியாது.

நீங்கள் போய்க்கொண்டிருக்கும் சபையை கிறிஸ்து ஸ்தாபித்தாரா? எங்கே? எப்போது? அந்த சபை அவர் மீது கட்டப்பட்டதா? அந்த சபைக்காக கிறிஸ்து மரித்தாரா? அதன் இரட்சகராக கிறிஸ்து இருக்கிறாரா? அதன் தலையாக கிறிஸ்து இருக்கிறாரா? அந்த சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறதா? அந்த சபையை வேதாகமத்தில் வாசிக்க முடியுமா?

நான் இக்கேள்விகளை உங்கள் மீது அழுத்தம் கொடுப்பதற்காகவோ அல்லது உங்களைச் சங்கடப்படுத்துவதற்காகவோ கேட்கவில்லை. மாறாக, நீங்கள் இக்காரியங்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து கிறிஸ்துவானவரால் கட்டப்படாத சபையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதையும், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திராத சபையில் அங்கம் வகிக்கிறீர்கள் என்பதையும் உணர்ந்து கொள்ளும்படியாக நான் இவைகளைக் கேட்கிறேன்.

இன்றைய நாட்களில், சபை முக்கியமானதல்லவென்றும், நீங்கள் எந்தச் சபையைச் சார்ந்தவராக இருந்தாலும் அது ஒரு பிரச்சனையில்லையென்றும் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படியானால், இவைகளைப் பற்றி உங்களுக்குச் சரியான தகவல்கள் தரப்படவில்லை. நிச்சயமாக, நம் ஆண்டவர் முக்கியமற்ற ஒன்றை ஸ்தாபித்திருக்கமாட்டார். மதிப்பற்ற ஒன்றிற்காக மரித்திருக்கமாட்டார். ஒரு நபர் வேறெதாவது முறையில் இரட்சிக்கப்படக்கூடும் என்றால், அந்த நபரை இரட்சிப்பதற்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தியிருக்க மாட்டார்.

ஆகையால், வேதாகமம் ஒரே சபைதான் உண்டென்றும், அந்த சபையானது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறதென்றும் போதிக்கிறது (எபே.4:4;கொலோ,1:18). கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு (மாற்கு 16:16) அவருடைய

சபையில் சேர்க்கப்படுகிறார்கள் [அப்.2:47]. இதினிமித்தம் இயேசு கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார் [எபே.5:23] மேலும், சபையானது இரட்சகராகிய கிறிஸ்துவுக்குச் சொந்தமானபடியால் தான் சபை கிறிஸ்துவின் சபை என்றழைக்கப்படுகிறது [அப். 20:28].

மேற்சொன்ன தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ள நீங்கள் உங்கள் வேதாகமத்தை வைத்து சரிபார்த்துக் கொள்ளும்படியாக உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் அப்படிச் செய்தால், சபையைப் பற்றிய உண்மையை நீங்கள் கண்டுபிடித்து கிறிஸ்துவின் சபையிலே அங்கமாக விரும்புவீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் சரி, மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் அங்கம் வகிக்க வேண்டாம். ஏனென்றால், அவைகள் பிரிவினை களைத்தான் அடையாளப்படுத்துகின்றன. வேதாகமத்தின் உண்மையான சபையைக் கண்டறியும் வரை, நீங்கள் போய்க் கொண்டிருக்கும் சபைகளில் திருப்தியடைய வேண்டாம். அப்போது தான், நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக முடியும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

ஒரு வேளை, இதுகாறும் நீங்கள் எந்த சபையிலும் அங்கம் வகிக்கவில்லை என்றால், ஏதாவது மார்க்கப் பிரிவினைக் கூட்டத் திற்குள் சிக்கித் தவிப்பதற்கு முன்பாக நான் உங்களுக்கு மேலான வாழ்வுதரும் கிறிஸ்துவின் சபையை அறிமுகப்படுத்துகிறேன். நீங்கள் எந்த ஒரு சபையிலும் உங்களை இணைத்துக் கொள்ளாதவராக இருக்கலாம். ஆனால், பலவிதமான உபதேசங்கள் உங்கள் மனதிற்குள் புகுந்து நீங்கள் குழப்பத்தில் இருக்கலாம். இப்படிப்பட்ட தருணத்தில் நீங்கள் பட்சபாதம் இல்லாதவர்களும், திறந்த மனதுடையவர்களுமா யிருந்தால், அதுதான் உண்மையான சபயைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாகும். மேலும்,நீங்கள் பல்வேறுபட்ட சபைகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிற காரியங்களை வைத்து, வேதாகமம் போதிக்கும் சத்தியத்தை ஆழ்ந்து சிந்தித்து, அந்த உபதேசம் சபையைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை நீங்கள்தான் கண்டுபடிக்க வேண்டும். உங்கள் மனம் விரும்பினால் நீங்கள் இதை முயற்சித்துப் பார்க்கலாம். எப்படியெனில், தேவன் உங்க ளுக்கு வாசிக்கவும், படிக்கவும், சிந்திக்கும் திறனையும், உடைய நல்ல மனதைத் தந்திருக்கிறார். அதாவது, தேவன் தமது வல்லமை யுள்ள வார்த்தைகளின் வாயிலாக எனக்கும், இவ்வுலகிலுள்ள எந்த மனிதனுக்கும், தேவன் தமது காரியமாக என்ன செய்யும்படி சொல்லியிருக்கிறாரோ, அதைத்தான் இப்பாடத்தைப் படிக்கும் உங்களுக்கும் சொல்லியிருக்கிறார்.

நீங்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அவைகள் ஒரே சபையைப் பற்றி மட்டுமே பேசுவதைக் காணமுடியும்.

அதை இன்னும் சற்று விவரமாக ஆராய்ந்து பார்த்தால், அது கிறிஸ்துவின் சபைதான் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள். அதன்பின்பு, அதன் அங்கத்தினராக மாற என்ன செய்ய வேண்டுமென்பதையும் கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் அந்த உபதேசத்தை அறிந்து கொண்டு அதன் அங்கத்தினராக மாற வேண்டுமென்பது என் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் அவருடைய சத்தியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல், அவருடைய சபையில் ஒருபோதும் அங்கம் வகிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார்.

ஒருவேளை நீங்கள் இரட்சிக்கப்படவில்லையென்றால் சபையில் அங்கத்தினராக முடியாது. ஏனென்றால், நீங்கள் உபதேசத்தின்படி இட்சிக்கப்பட்டிருந்தால் தேவனே உங்களைத் தமது சபையிலே சேர்த்திருப்பார். இது உங்களுக்குத் தெளிவாகப் புரியும் என நம்புகிறேன். இந்தக் காரியங்களை எல்லாம் நீங்களே சரிபார்த்துக் கொள்ளும்படி உங்களுக்கு சத்தியத்தின்படி அழைப்பு விடுக்கிறேன். ஆம், நிச்சயமாக இதில் நீங்கள் ஒன்றைக் கூட இழக்கப் போவதில்லை. மேலும், தேவனுடைய வார்த்தையின் காரியங்களைச் செயலாற்றுவதின் மூலம் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக இருந்தால், நான் ஓர் உண்மையான கிறிஸ்தவனாக கிறிஸ்துவின் ஒரே மெய்யான சரீரத்தில் அங்கமாக இருக்கிறேன் என்று சந்தோஷமாகச் சொல்லும் சிலாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும். இப்போது நீங்கள் உங்கள் ஆத்துமாவை மோசம்போக்கும் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தில் இல்லை என்பதும், மனிதர்களுடைய வீணான கட்டளைகள் மற்றும் உபதேசங்ளைப் பின்பற்றவில்லை என்பதும் இப்போது உங்களுக்கு வெளிச்சம். ஆகையால், உங்களிடத்தில் சத்தியம், இரட்சிப்பு மற்றும் நம்பிக்கை அதிகப் படியாக இருக்கிறது. இன்று சிலர் இப்படிப்பட்டதொரு மேன்மை யான சிலாக்கியத்தை இழந்துவிட்டு அற்பமான காரியங்களில் திருப்திப்பட்டுக்கொள்வது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது!

இப்போது நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருந்தால், ஓர் உண்மையுள்ள அங்கத்தினராக இருக்கிறீர்கள். அப்படித்தானே? அப்படி இல்லையென்றால், நீங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்தவரல்லாதவர்களை விடச் சிறந்தவர் களல்ல. சொல்லப்போனால், நீங்கள் மிக மோசமான நிலையில் இருக்கிறீர்கள்.

ஏனென்றால், உங்களுக்கு உண்மையான சத்தியம் தெரிந்திருந்தும் அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் காரியத்திலிருந்து விலகிவிட்டீர்கள். இப்படிச் செய்ததினால் பல ஆத்துமாக்கள் இழந்து போனதற்கு நீங்கள் காரணமாகிவிட்டீர்கள். இப்படியிராமல் நீங்கள், உங்கள் இருதயங்களை வேதவசனத்தால் நிரப்பி, அவைகளை நீங்களும் கைக்கொண்டு மற்றவர்களும் கைக்கொள்ளும்படி அதை உண்மையாய்க் கற்றுக் கொள்ளுங்கள். இப்படிச் செய்ய தேவன் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார். மேலும், ஒரு கிறிஸ்தவரான நாம் கர்த்தருக்கென்று சேவை செய்வதால் அதாவது, அவரது சுவிசேஷத்தை எடுத்துரைப்பதால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்க முடியும். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த முடியும். ✝

## கொரிந்து பட்டணம்

- *கிரேக்க தேசத்திலிருந்த ஒரு துறைமுகப் பட்டணம் வாணிகமும் கிரேக்க நாகரீகமும், இங்கு செழித்தோங்கி யிருந்தது.*
- *வடக்கு கிரேக்க தேசத்தையும், தெற்கே இருக்கிற பெலோபென்சி பகுதியையும் இது இணைக்கிறது.*
- *இணைக்கும் இப்பகுதி 4 மைல்கள் அகலம் கொண்டது. இந்த பகுதியில் தான் கொரிந்தியர் பட்டணம் உள்ளது.*
- *இப்படியோர் முக்கிய இடத்தில் அமைந்ததால் வாணிப கேந்திரமாக திகழ்ந்தது. பவுலின் நாட்களில் சுமார் நாலு லட்சம் பேர் இங்க வசித்துள்ளனர்.*

பெண்கள் பகுதி

# எலிசபெத்

SiS. **ரேச்சல் நாயகம்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். வேதாகமத்தை அன்றாடம் வாசிக்கிற பெண்களாகிய நமக்கு ஒரு தெளிவுள்ள வாழ்க்கை வேண்டும். வெறுமனே வாசித்து விட்டு வேதாகமம் என்றால் என்ன என்று தெரியாதவர்களுக்கும், நமக்கும் ஒரு வித்தியாசம் இன்றி வாழ்ந்தோமென்றால் யாருக்கும் எந்த பயனும் இல்லை. நாம் பின்பற்றுவதற்கென்று சில குணாதிசயங்களை குறித்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் சந்திக்கும் எல்லாக் காரியங்களுக்கும், எல்லா சூழ்நிலை களுக்கும் மனம்போன போக்கில் செயல்படாமல் ஒரு நிமிடம் நின்று இது போன்ற சூழ்நிலைகளில் சிறப்பாய் வாழ்ந்தவர்கள் விசேஷமாக பெண்கள் வேதாகமத்தில் இருக்கிறார்களா? என்று பார்த்து அவர்களை நம் மாதிரிகளாக வைத்து நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் பழக வேண்டும். ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தல் வரைக்கும் 66 புத்தகங் களிலும் இடம் பெற்றிருக்கும் பெண்கள் பற்றிய ஓர் அறிவு நமக்கு இருக்க வேண்டும். சிலரிடமிருந்து சில காரியங்களை கற்றுக்கொள்ளக் கூடாது, பலரிடமிருந்து பல நல்ல குணாதி சயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மேல் அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் நம் தேவன் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும் வகையில் நமக்குத் தேவையான அனைத்து பதில்களையும் வேதாகமத்தில் இடம் பெறச் செய்து இப்படியாய் நம்மில் அன்பு கூர்ந்திருக்கிறார்.

சரி, இம்மாதம் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கும் இந்த எலிசபெத்'' தாயாரிடமிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம. வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் (ஏசாயா 40:3-8) என்று வாசிக்கிறோம். இந்தச் சத்தமானது வரப் போகிற மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துகிற ஒரு சத்தம். இந்த சத்தத்திற்கு சொந்தக்காரனை இந்த உலகிற்கு கொண்டு வர ஒரு கருவியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு ஸ்திரீ தான் எலிசபெத். தேவனுடைய ஆவியானவர் லூக்காவைக் கொண்டு சொல்லும் போது, யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோ தின் நாட்களில், அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா

என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான் அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து.

அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். [லூக். 1:5,6]. எந்தக் குற்றமும் செய்யாதிருந்த இந்த நல்ல தம்பதிக்கு பெற்றோராகும் சிலாக்கியம் ஏனோ மறுக்கப்பட்டிருந்தது. வயது சென்றவர்களாயுமிருந்தார்கள். லூக்காவால் எழுதப்பட்ட முதலாம் அதிகாரத்திலே நாம் பார்க்கும் போது இந்த கணவனும், மனைவியும் தங்களுக்கு ஒரு பிள்ளை வேண்டுமென்று பரலோகத்தின் தேவனிடத்தில் விண்ணப்பங்களை ஏறெடுத்திருக்கிறார்கள். காபிரியேல் தூதன் சகரியாவுக்கு தரிசனமாகி கூறும் போது, **சகரியாவே, பயப்படாதே. உன் வேண்டுதல் கேட்கப்பட்டது**'' என்கிறான். உன் மனைவி யாகிய எலிசபெத் ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான்'' என்று பேரிடுவாயாக என்றும் கூறுகிறான். தேவன் இவர்களுடைய நீண்ட நாள் விண்ணப்பத்தைக் கேட்டார். அந்நாட்களில் இஸ்ரவேலிலே தாய்மையடையாத நிலை ஒரு பெண்ணுக்கு இருக்குமானால் அது மிகவும் நிந்தையான ஒரு காரியமாகும். எலிசபெத்துக்கு இது ஒரு பெரிய ஏமாற்றமாகவே இருந்தது. தன் பக்திக்கும், நீதியான வாழ்க்கைக்கும் பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்து மனதுக்குள்ளாகவே புழுங்கியிருந்திருப்பாள். நீதியுள்ள தேவன், அன்பான தேவன், ஏற்ற காலத்திலே, காலம் நிறைவேறும் போது நிச்சயமாக காரியங்களை நடக்கச் செய்கிறார். வயது சென்று கொண்டிருந்தும் நம்பிக்கையை இந்த எலிசபெத் இழக்கவேயில்லை. நாமெல்லாம் காரியங்கள் நாம் நினைத்த மாதிரி நடக்கவில்லையென்றால் வேதம் வாசிப்பதில்லை, ஜெபிப்பதில்லை, ஏற்றுக்கொண்ட கொள்கையில் ஒரு சந்தேகம், தெளிவற்ற, செயலிழந்த ஒரு நிலைக்குப் போய் விடுகிறோம். தேவன் இந்த வயது சென்ற தம்பதியினரின் குற்றமற்ற, நீதியான வாழ்க்கைக்கு ஓர் அங்கீகாரம் கொடுக்கிறார். யோவானை சுமக்கிற ஒரு தாயாராக மாறுகிறாள் இந்த எலிசபெத் மகிழ்ச்சி அடைகிறாள்.

இந்த யோவான் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு இயேசுவின் தாயாகிய மரியாள் காபிரியேலினால் கூறப்பட்ட யாவையும் தன் மனதிலே வைத்தவளாய், இதை வெளியே சொல்ல சரியான நபர் எலிசபெத் மட்டுமே என்று எண்ணி

எலிசபெத் வீட்டுக்குத் தீவிரமாய் எழுந்து போகிறாள். எலிசபெத், மரியாள் இவர்களுடைய சந்திப்பு மிகவும் அற்புதமான, அழகான சந்திப்பாகும். மரியாளுடைய வாழ்த்துதல் சத்தத்தை கேட்ட வுடனே எலிசபெத் வயிற்றில் இருந்த பிள்ளை களிப்பாய் துள்ளிற்று. கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அதை ஏற்றுக் கொள்ளும் போது வயிற்றில் உள்ள குழந்தை கூட அதை அங்கீ கரித்து, ஆமோதிக்கிறது. இந்த எலிசபெத் கன்னி மரியாளை வாழ்த்தின தோடல்லாமல் அவள் வயிற்றில் உருவாகியிருக்கும் தேவ குமாரனையும் வாழ்த்துகிறாள்.

என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. [லூக்கா 1:43]. எவ்வளவு பெரிய வார்த்தை இது! இயேசுவை, என் ஆண்டவன் என்று கூறிய முதல் இஸ்ரேலியப் பெண் எலிசபெத்னதாகத்தான் இருக்கும். இயேசு வின் பிறப்புக்கு ஒன்பது மாதத்திற்கு முன் இந்த அறிக்கையை செய்கிறாள் எலிசபெத். எலிசபெத்துக்கு பிரசவ காலம் நிறை வேறின போது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப் பண்ணினா ரென்று அவருடைய அயலகத்தாரும் பந்து ஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனே கூட சந்தோஷப்பட்டார்கள்.

எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படி வந்த உறவினர்கள் பிள்ளையின் தகப்பனுடைய நாமத்தின்படி சகரியா என்று பேரிடும்படி கூறினார்கள். அப்பொழுது எலிசபெத், அப்படியல்ல, அதற்கு யோவான்' என்ற பேரிட வேண்டும் என்று திட்டமாகக் கூறிவிட்டாள் [லூக். 1:60]. ஒன்பது மாதங்களுக்கு முன்பாக தூதனால் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு முழுமையான கீழ்ப்படிதலாக இது இருக்கிறது. எலிச பெத்தின் மன உறுதியும், நம்பிக்கையும், தேவன் நீதியுள்ளவர் என்பதில் அவளுக்கு இருந்த தெளிவையும் தான் இது காட்டு கிறது. அநேக சமயங்களில், தேவனுக்காக செயல்பட வேண்டிய நேரம் வரும்போது உற்றார், உறவினர்கள் நம்மை சுற்றியிருக்கும் போது நம்முடைய விசுவாசத்தை கொஞ்சம் தளர்த்தி, பேச வேண்டிய உண்மையைப் பேசாமல் அவர்களையும் பிரியப்படுத்தி தேவனையும் பிரியப்படுத்தினோம் என்று எண்ணி தேவ கட்டளை க்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல் போகிறோம். பிரியமானவர்களே நாம் அப்படி செயல்படக்கூடாது. அது ஒரு தேர்ச்சியடைந்த கிறிஸ்தவப் பெண்ணுக்கு சிறப்பல்ல.

எலிசபெத் தாய்மையடைவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாக காணப்பட்டாள். வசனம் அப்படித்தான் சொல்லுகிறது. பிறக்கப்போகிற ஒரு குழந்தைக்கு நீதியான ஒரு தாய் கிடைப்பதென்பது எவ்வளவு ஒரு சிலாக்கியமான காரியம். தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்திருந்தாள். இந்த மாதிரி தகுதி வாய்ந்த பெண்களால் தான் பிள்ளைகளை கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக வளர்க்க முடியும். இன்னும் பிறக்காத இயேசு அவளுக்கு ஆண்டவராக இருந்தார். இயேசுவை ஆண்டவர் என்று சொல்லும் முக்கிய பங்கை எலிசபெத் பெற்றுவிட்டாள். யோவான் தேவனுக்குள் வல்லமையானவனாக வளர்ந்தான். கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது. நீதியான இருதயத்தையும், நீதியான வாழ்க்கையையும் கொண்டிருந்த இந்த எலிசபெத் தை யோவானின் தாயாக தெரிந்தெடுத்தது தேவனுடைய சித்தம் என்பது நன்றாக விளங்குகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவப் பெண்ணுக்கும் இவள் ஒரு உயிருள்ள உதாரணமாக திகழ்கிறாள். அநேக எலிசபெத்துக்களை நாம் பெற வேண்டுமானால் இயேசு நம் வாழ்வில் இருக்க வேண்டும். நம் குடும்பத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவில் பிரியமான தாய்மார்களே! எலிசபெத்திடம் நாம் கற்றிருக்கும் சில பாடங்கள் நமக்கு பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். கற்பனைகள் எல்லாவற்றிலும் குற்றமற்ற எலிசபெத் அம்மாவைப் போன்று புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நாமும் புதிய ஏற்பாட்டிலே அப்போஸ்தலர்கள் கடைப்பிடித்த உபதேசத்தை அப்படியே ஏற்று அப்படியே கைக்கொண்டு வாழ்ந்தோமானால் நிச்சயமாக நம்முடைய பிள்ளைகளை தேவனுடைய காரியங்களில் ஈடுபாடுடையவர்களாக வளர்க்க முடியும். அதற்காகத்தான் தாய்மை என்ற ஸ்தானத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அப்படிச் செய்ய தேவன் நமக்கு உதவி செய்வாராக ஆமென்.

✝

---

**நாளை உதிரும் மலருக்கே**

**வர்ணம் தீட்டும் நம் தேவன்**

**நித்தியமாய் அவரோடு வாழப்போகும் நம்மை**

**நற்கதியாய் விட்டிருவார் என நினைக்கலாமா?**

சிறுவர் பகுதி

# உண்மை பேசுதல்

Dr. ப்ரைசி ஏபில் நாயகம்

அன்புக் குழந்தைகளே! நீங்கள் யாவரும் நலமாகவும், இந்த நோய்த் தொற்றுக் காலத்தில் கவனமாகவும் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

இம்மாதம் நாம் நம் வாழ்வில் உண்மை பேசுதல் பற்றிப் பார்க்கப் போகிறோம். உங்களில் எத்தனைபேர் பொய் சொல்லி யிருக்கிறீர்கள்? எத்தனை பேர் எப்போதும் உண்மை பேசுகீறீர்கள்? முதல் கேள்விக்கான பதிலை நாம் ஒரு பட்டியலாகப் போட்டால், நம் எல்லோருடைய பெயரும் அப்பட்டியலில் இடம் பிடிக்கும். அப்படித்தானே! ப்ரைசி அக்காவாகிய நான் கூட சில சமயங்களில் பொய் பேசியிருக்கிறேன். ஆயினும், நம் தேவன் பொய்யை வெறுக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு, நாம் நம்மை மாற்றிக் கொண்டு, உண்மைகளை மறைத்துப் பொய் பேசுவதைத் தவிர்த்து, தேவப் பார்வையில் பாவம் செய்யாதவர்களாய் இருக்க முடியும். நாம் இப்போது, அப்போஸ்தலர் 5:1,11 வசனங்களை வாசித்து, அதிலிருந்து சில காரியங்களைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

என் அன்புக் குழந்தைகளே, இந்த வசனப்பகுதியில், தேவன் பொய்யை எப்படி வெறுக்கிறார் என்றும், பொய் பேசின அனனியா வும், சப்பீராளும் எப்படித் தேவனால் தண்டிக்கப் பட்டார்கள் என்றும் பார்க்க முடியும். தேவன் பொய்யை வெறுக்கிறார் என்பதை இங்கு மட்டுமல்ல, வேதாகமத்தின் வேறு பல பகுதி களிலும் நாம் காணமுடியும். இவர்கள் தங்கள் காணியாட்சியை விற்று, அதில் ஒரு பகுதியை ஒளித்து வைத்துக் கொண்டு, மீதியை கர்த்தரின் பணிக்காக அப்போஸ்தலர் வசம் கொடுத்தார் கள். தாங்கள் விற்ற தொகையால், ஒரு பகுதியை ஒளித்து வைத்தது யாருக்கும் தெரியாது என்று அவர்கள் எண்ணிக் கொண்டனர். ஆனால், நாம் நினைப்பது, பேசுவது, செய்வது என்று எல்லாமே நம் தேவனுக்குத் தெரியும். அவர் பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை.

ஆகையால், எனக்கன்பான சிறு பிள்ளைகளே! எப்பொழுதும் நாம் உண்மையைப் பேச வேண்டும். நாம் ஏதாவது தவறு செய்யும் பட்சத்தில், அவருடைய இரக்கத்திற்காக மன்றாடினால், நம்மை மன்னித்து ஏற்றுக் கொள்வதற்கு நம் அன்பான தேவன் எப்போதும்

ஆயத்தமாக உள்ளார். ஆகையால், நம்முடைய தவறுகளுக்காக தேவனிடத்தில் மன்னிப்பு கோரி, வரும் காலங்களில் எப்போதும் சரியானதைச் சிந்திக்கவும், பேசவும்,செய்யவும் கற்றுக் கொள்வோம். நாம் எப்போதும் உண்மை பேசி அவருக்காக வேலை செய்வோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன் ப்ரைசி அக்கா. ✝

---

**கேள்விகள்**

1. ஏன் அப்போஸ்தலர்களிடம் ஒவ்வொருவரும் பணம் கொடுத்தார்கள்?
2. பணம் கொடுக்கம்படி அனனியாவும், சப்பீராளும் எதை விற்றார்கள்?
3. அனனியாவும், சப்பீராளும் என்ன தவறு செய்தார்கள்?
4. அனனியா, சப்பபீராளுக்கு என்ன நடந்தது?
5. அனனியாவின் இருதயத்தை எது நிரப்பியது?

## கிறிஸ்தவின் போதனைகள் ஏன் தாக்கத்தை ஏற்படுத்தியது?

☆ அவர் வெளிப்படையாகப் பேசினார்
(மத்தேயு 4:19, யோவான் 4:14)

☆ அவர் இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்தவராய் பேசினார்
(மாற்கு 8:2)

☆ அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார்
(மத்தேயு 19:14: மாற்கு 10:21)

☆ அவர் மனிதத் தேவைகளைத் சந்தித்தார்
( யோவான் 9:1,38)

☆ ஜனங்கள் கேட்டதியும் திராணிக்குத் தக்கதாய் போதித்தார்
(மாற்கு 4:13)

☆ அவருடைய வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் தொடர்பு இருந்தது ( யோவான் 8:29,46) எபிரெயர் 4:15).

# உபதேசங்கள் தேவனுடையது

## உபதேசங்கள் அப்போஸ்தலருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது

**Bro. V. ஆசிர்வாதம்**

(தொடர்ச்சி ...)

**மே**லும் இயேசுவானவர் மத்தேயு 16 :19 த் பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொன்னார். மேற்கண்ட வசனத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் மத்தேயு 16 : 13:19 வரை வாசிக்கவேண்டும். இந்த பகுதியில் இயேசுவானவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து, ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு சீஷர்கள் அநேக பதில்களைச் சொன்னார்கள். கடைசியாக, நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்திரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னான். இந்த அறிக்கை மாபெரும் உறுதியான விசுவாச அறிக்கையாகக் காணப்பட்டது.

இப்படிப்பட்ட உறுதியான விசுவாச அறிக்கையின் மேல், இயேசு தம்முடைய சபையைக் கட்ட வேண்டுமென்று திட்ட மிட்டிருந்தார். பேதுருவின் இந்த அறிக்கை இயேசுகிறிஸ்துவின் முழு வாழ்க்கையின் அர்த்தத்தையும் வெளிப்படுத்தியது. மேலும், அது கிறிஸ்துவின் உபதேசங்களின் அஸ்திபாரக் கல்லாக அமைந்தது. நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அவை களின்படி செய்கிறவனை கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் என்று இயேசு சொல்லியிருந்தது போல (மத் 7 : 24), பேதுருவும், இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை யிட்டதின் மூலம் தன் விசுவாசத்தைக் கொண்டு கன்மலை யின்மேல் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனைப் போல காணப்பட்டான். மேலும், பேதுரு என்னும் பெயரும் அதற்கு ஏற்றாற்போல பாறை என்று அர்த்தமாயிருக்கிறது. பேதுருவின் பெயரின் அர்த்தத்தைவிட அவனுடைய விசுவாச அறிக்கை **ஒரு பெரிய பாறையைப்போல** காணப்பட்டது. எனவே இயேசு, நீ பேதுருவாய் இருக்கிறாய் அதாவது உறுதியான விசுவாச அறிக்கையை உடைய பாறையைப்போல இருக்கிறாய், இந்த கல்லின்மேல் அதாவது **இந்த உறுதியான விசுவாச அறிக்கையாகிய அஸ்திபாரத்தின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார்.**

மேலும், இயேசுவானவர் தாம் ஸ்தாபிக்கப்போகும் சபையை முதல் பிரசங்கத்தின் மூலம் திறந்து வைக்கக் கூடிய நபர் இந்த பன்னிரெண்டு சீஷரில் ஒருவன் யார்? என்ற கேள்வியும் கிறிஸ்துவுக்கு இருந்திருக்கவேண்டும். பேதுரு இந்த அறிக்கையைச் செய்தபோது, பரலோகத்திலிருக்கிற பிதாவானவர் இதை பேதுருவுக்கு வெளிப்படுத்தி முதல் சுவிசேஷ பிரசாங்கத்தின் மூலம் சபையை திறந்து வைக்கக்கூடிய ஆளாக அவனை பிதாவானவர் தெரிந்துகொண்டார் எனவும், இது பரலோகத்தின் தீர்மானம் எனவும் இயேசு அறிந்து, பேதுருவை நோக்கி, நீ பாக்கியவான் பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். இந்த கல்லின்மேல் [விசுவாச அறிக்கையின் மேல்] என் சபையைக் கட்டுவேன் அதற்கான திறவுகோல்களை [சாவி] அதாவது முதல் சுவிசேஷத்தை அறிவித்து இரட்சிப்பின் கதவை திறக்கும் அதிகாரத்தை நான் உனக்குத் தருகிறேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொன்னார்.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மூலம் நாம் அறிந்து கொள்ளுகிற சத்தியம் என்னவென்றால், பரலோகத்தின் தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தை பூமியில் ஸ்தாபிக்கப்போகிறார். [தானி 2 : 44] அது அவருடைய குமாரனுடைய அதிகாரத்திற்குட்பட்ட ராஜ்ஜியமாகிய சபையாக இருக்கிறது. [எபேசியர் 5:5, கொலோசெயர் 1 : 13] அதாவது, தேவனுடைய சட்டதிட்டங்களைக் கொண்டு, எந்த ஒரு மனிதனையும் நித்திய வாழ்வுக்கு வழிநடத்துகிற தேவனுடைய அரசாங்கமாக இருக்கிறது. இந்த இராஜ்ஜியத்தின் பணிகள், ஊழியங்கள் மண்பாண்டமாக இருக்கிற மனிதர்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திருப்பணியை தொடங்கி வைக்கும் பாக்கியம் முதல் முதல் பேதுருவுக்கு கையளிக்கப் பட்டது.

அப்படியே பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் யூதருக்கு முதல் முதல் சுவிஷேத்தை பிரசங்கித்தான். 3000 பேர் ஞானஸ் நானம் பெற்றார்கள். சபை தொடங்கப்பட்டது. [அப் 2 : 14–47]. அதேபோல புறஜாதியாரும் பேதுருவின் வாயினால் முதல் முதல் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட்டார்கள் [அப்போ 15 : 7]. இவர்களெல்லாரும் பேதுருவின் பிரசங்கத்தை முதல் முதலாகக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று, இரட்சிப்பின் மகிமையோடு தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையில் பிரவேசித்து, தேவனுடைய பிள்ளைகளானார்கள். அதன்பின்பு, உலகமெங்கும் அநேக தலைமுறைகளாக இந்த சுவிசேஷப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பேதுரு இந்தபணியைத்

தொடங்கி வைக்கக்கூடிய பாக்கியவானாக காணப்பட்டான். மேலும், இந்த அப்போஸ்தலர்கள் உபதேசிக்கும் தேவச் சட்டங்களுக்கு கீழ்படிந்து அவைகளை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாய், அவருடைய பரிசுத்த ஆலயமாக கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள். (எபேசி 2 : 22) அப்போஸ்தலருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களும், ஏற்றுக்கொண்டு பின்பு விலகிப்போகிறவர்களும் தங்கள் இரட்சிப்பை இழந்து போவதுமல்லாமல் பரலோகத்திலிருந்து கட்டவிழ்க்கப்பட்டு தங்கள் ஆசீர்வாதங்களையும் இழந்து போவார்கள். அப்போஸ்தலருடைய உபதேசங்களை ஏற்றுக்கொண்டு முடிவு பரியந்தம் அதை கைக்கொண்டுவந்தால் பரலோகத்தின் சுதந்திரவாளிகளாக இருப்பார்கள், அதை விட்டு விலகும்போது பரலோகத்தின் மகிமையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியமாக இருக்கிறது.

ஆகையால் அப்போஸ்தலருடைய உபதேசம் எவ்வளவு முக்கியமானது என்பதையும் அவைகளுக்கு நாம் கீழ்ப்படிந்திருப்பது எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். இவ்விதமாய் மனுஷருக்கு பாவமன்னிப்பைக் கொடுக்க தேவன் சித்தமானார். அதற்கு இயேசு காரணமானார், அதற்கு அப்போஸ்தலர் வழிகாட்டிகளானார்கள்.

(தொடரும் ...) ✝

## *நாளும் – நடப்பும்*

- 10, +2 மாணவர்களுக்கு மாதந்தோறும் அலகுத்தேர்வு, பொது தேர்வுக்கு மாணவர்களை தயார்படுத்தும் வகையில் பள்ளிக்கல்வித்துறை உத்தரவு
- +2 தேர்வு முடிவுகள் இன்று வெளியாக உள்ளது.
- தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது
- செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் சென்றால் சுவாசிக்க வழி உள்ளதா? நாசா ஆய்வு பணி
- 23ம் தேதி தொடங்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட 75 பேருக்கு கொரோனா உறுதி
- Pegasus மென்பொருளை பயன்படுத்தி முக்கிய பிரமுகர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்பதாக சர்ச்சை வெளியாகியுள்ளன. 28 ம் தேதி விசாரணை நடத்த நாடாளுமன்றம் நிலைக்குழு திட்டம்.

# வெளிப்படுத்தின விசேஷம்
## அதிகாரம் 1

Bro. **ஜேம்ஸ் ஆபகூக் ராஜ்குமார்**

சென்றமாத தொடர்ச்சி...

30 வெளி. 1:7ல் இயேசுகிறிஸ்து வரும்போது எவ்வாறு வருகிறார்?

**பதில்:** மேகங்களுடனே வருகிறார், யாத். 12:23; ஏசா, 19:1; 26 : 21; 35:4; 66: 15; ஆப. 2:7; 1 தெச. 4:16; 2 தெச.1:7–10. இந்த வசனங்களில் சில, வெவ்வேறு காலங்களின் வருகையைக் குறிக்கிறது.

31 கிறிஸ்துவானவர் மீண்டும் வரும்பொழுது யார் அவரைக் காண்பார்கள்? வெளி.1:7

**பதில்:** பூமியில் இருந்தவர்கள் இருக்கிறவர்கிறவர்கள் மற்றும் அவரைக் குத்தினவர்கள் யாவருடைய கண்களும் அவரைக் காணும்.

32 கிறிஸ்துவானவர்மீண்டும் வரும்பொழுது யார் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்? வெளி.1:7.

**பதில்:** பூமியின் கோத்திரத்தாரெல்லாரும். சுவிசேஷத்தைக் கேட்டு மனந் திரும்பாதவர்கள், ஆண்டவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள், தேவன் இல்லை என்று வாதிட்டவர்கள், விசாலமான வாசல் வழியிலே நடக்கிறவர்கள் அனைவரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள், மத். 7:13.

33 வெளி. 1:8 ல் கர்த்தர் எவ்வாறு தம்மைக் குறித்து திருவுளம் பற்றுகிறார்?

**பதில்:** அவர், இருக்கிறவரும் இருந்தவரும் வருகிற வருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும் ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவளம் பற்றுகிறார்.

34 கிறிஸ்தவர்களுக்கு யோவான் யாராக இருப்பதாக கூறுகிறார்? வெளி.1:9.

**பதில்:** நம் சகோதரன். இன்றைக்கு பட்டங்களை விரும்புகிற வர்கள் யோவானை கவனிக்க வேண்டும், மத். 23 : 8; எபி. 2:11.

35 எவைகளுக்கு உடன் பங்காளியாயிருப்பதாக யோவான் கூறுகிறார்? வெளி. 1:9.

**பதில்:** இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும், மத். 24:9 ; அப். 14: 22 ; யாக். 5: 10 ; 2 பேது. 1:5–7.

36 யோவான் எதின் நிமித்தம் எங்கு இருந்ததாகக் குறிப்பிடுகிறார்? வெளி.1:9.

**பதில்:** அவர், தேவவசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

37 என்றைக்கு யோவான் ஆவிக்குள்ளானதாகக் குறிப்பிடுகிறார்? வெளி. 1: 10.

**பதில்:** கர்த்தருடைய நாளில்.

38 கர்த்தருடைய நாள் என்பது என்றைக்கு? வெளி.1:10.

**பதில்:** புதிய ஏற்பாட்டில் கர்த்தர் (Kuriakos) என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கின்றது, இந்த Kuriakos என்கிற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னொரு இடத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்திற்காக 1கொரி. 11:21ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இது சபை கூடும் நாள், கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள் அல்லது வாரத்தின் முதல்நாள், அப். 20:7 ; 1கொரி. 16 : 2.

39 தீர்க்கதரிசிகள்ஆவிக்குள்ளான சில உதாரணங்களைக் காணவும்! வெளி. 1:10.

**பதில்:** எசேக்கியேல், எசே. 11:24; 37:1. அப்போஸ்தலனாகியபவுல்? , 2 கொரி. 12:1–4.

40 யோவானுக்கு பின்னாலே கர்த்தருடைய சத்தம் எவ்வாறு இருந்ததாகக் கூறுகிறார்? வெளி.1:10.

**பதில்:** எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தம் இருந்ததாகக் கூறுகிறார், சங். 29:1–11 ; எபி. 12:19.

41 இயேசு கிறிஸ்து தாம் எவ்விதமாய் இருப்பதாக குறிப்பிடுகிறார்? வெளி. 1:11.

**பதில்:** ''நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்'' என்கிறார், வெளி.1:8 ; 21:6.(கிரேக்க எழுத்து அகராதியில் அல்பா என்பது முதல் எழுத்து ஓமேகா என்பது கடைசி எழுத்து. அதுபோல இயேசுகிறிஸ்து ஆரம்பமும், முடிவுமாக இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது).

42 யோவான் காண்கிறவைகளை எதில் எழுதி யாருக்கு அனுப்பும்படி இயேசுவானவர் கட்டளையிட்டார்? வெளி. 1:11.

**பதில்:** நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கு அனுப்பு என்றார்.

43 யோவான் தன்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பின போது யாரைக் கண்டார்? வெளி.1:12, 13.

**பதில்:** திரும்பின போது, ஏழுபொன் குத்துவிளக்குகளையும், அந்த ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவரையும் கண்டார்.

44 இந்த மனுஷகுமாரனுக்கொப்பாயிருந்தவர் யார்? வெளி. 1:13.

**பதில்:** தேவகுமாரனும், மனுஷகுமாரனுமான இயேசு கிறிஸ்து, மத். 1:23; 8 : 20; 12 :8.

45 யோவான் கண்ட இயேசுகிறிஸ்து எப்படியிருந்தார்? வெளி. 1:13 – 15.

**பதில்:** நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையா யிருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது என்கிறார்.

கிறிஸ்துவானவர் வல்லமையுள்ளவர் என்பதைக் காட்டுகிறது. இதற்கு சமமான நிகழ்ச்சிகள்:
மலையில் மறுரூப மானது, மத்தேயு 17:2.
எசேக்கியேலின்தரிசனம், எசேக்கியேல் 1:1–28.
ஏசாயா கண்ட தரிசனம், ஏசா.6:1–10 போன்றவைகள்.

46 ஏழு பொன் குத்துவிளக்குகள் எதைக்குறிக்கிறது? வெளி. 1: 13, 20.

**பதில்:** ஏழு பொன் குத்துவிளக்குகள் ஆசியாவிலிருந்த ஏழு சபைகளைக் குறிக்கிறது, மேலும் கிறிஸ்துவின் உபதேசத்திலே நடக்கிற அனைத்து பிராந்திய சபைகளையும் குறிக்கும்.

[தொடரும்...]

# கொரோனா - கர்த்தருடைய கோபமா?

Bro. பாண்டியன்

அருமையான விசுவாசத்தைப் பெற்ற தேவ பிள்ளைகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இப்போது பயமுறுத்தி வரும் கொரோனாவைப் போலவே வேதத்தில் இஸ்ரவேல் ஜனங்களின் மீறுதலின் போது தேவன் அவர்களை கொள்ளை நோயினால் வாதித்தது நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. இப்படிப்பட்ட பேரழிவு நேரிடும் போதெல்லாம் உலகம் மோசமாகிவிட்டதால் கடவுள் தண்டிக்கிறார் என்று ஜனங்கள் பேசிக் கொள்வார்கள். ஆனால் உண்மையில் தேவனை வணங்கும் ஜனங்கள் தவறும் போது தான் தேவன் இவ்விதமாக தேசத்தைக் கண்டிக்கிறார் என்பது வேதம் நமக்குத் தருகிற எச்சரிப்பாக உள்ளது.

தேவனுடைய கோபத்தின் நாளிலே அவருடைய எரிச்சலின் அக்கினியால் தேசம் எல்லாம் அழியும், தேசத்தின் குடிகளெல்லாம் நிர்மூலம் பண்ணுவார் என்று செப் 1:18 ல் சொல்லப்பட்டிருப்பது இன்றையக் கொரோனா உலகப் பேரழிவுக்கு ஒத்திருக்கிறது. தேவ எரிச்சலுக்குக் காரணம் அவர்கள் கர்த்தரைவிட்டுப், பின் வாங்கியது மட்டுமல்ல, கர்த்தரை அவர்கள்  தேடாமலும் விசாரிக்காமலும் போனார்கள் என்பதே. (செப் 1:6).  மேலும் 17ம் வசனத்தில் சொல்லப்பட்ட அவர்கள் பாவத்தின் நிமித்தம் குருடரை போல நடக்கவும், அவர்கள் ரத்தம் புழுதிப் போல் சொரியும் ( செப் 1:17) என்பதெல்லாம் இன்றைய கரும் பூஞ்சை தொற்றுக்கு ஒத்திருக்கிறது. எனவே தேவ பிள்ளைகள் சபைகூடுதலில் குறை வைக்காமல், நமது தேவைகளில் நாம் மனுஷரை அல்ல தேவனையே தேடி நாட வேண்டும் என்பது இதனால் நாம் கற்க வேண்டிய பாடமாகிறது.

அப்படிப் போலவே ஏசாயா தீர்க்கனின் காலத்தில் ஜனங்கள் தேவனுக்குச் செவி கொடாமல் போனதால் தேசத்தின் நன்மையை புசிக்க முடியாமல் பட்டயத்துக்கு இரையாவீர்கள் என்ற எச்சரிக்கப்பட்டனர் (ஏசா ஆனால் இனங்கள் கீழ்படியாமற் 1:19,20) போன போது கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி அதைக் கவிழ்த்து அதின் குடிகளைச் சிதறடிப்பார் என்றும் ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரிய வேலைக்காரன் எஜமான், கடன் கொடுத்தவன், வாங்கினவன் மற்றும் வட்டி வாங்கினவன்

கொடுத்தவன் அனைவருக்கும் சமமாக நடக்கும் (ஏசா.4:16 என்றும் கூறினார். தேசத்தின் குடிகள் தேவனுடைய பிரமாணத்தை மீறி அவருடைய நித்திய உடன்படிக்கையை முறித்து போட்டால் சாபம் தேசத்தை பட்சித்தது என்று அதைத் தொடர்ந்து வாசிக்கிறோம். இன்றைய லாக் டவுனில் திருமண ங்கள் ஒய்ந்து நின்று போனதை ஏசா 24:8 ல் காண்கிறோம்.

இதில் நமக்குள்ள பாடம் என்ன? இஸ்ரவேல் ஜனங்களுக்கு நாயகராக பிதாவாகிய தேவனே அவர்களுடன் நித்திய உடன் படிக்கை செய்திருந்தார். அதை மீறியதால் தண்டிக்கப் பட்டார்கள். இப்போது நாம் சபையாராக கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக உள்ளோம். இதை முறித்தால் (2கொரி 11:2) நாமும் தண்டிக்கப்படுவோம் என்பது நமக்குள்ள எச்சரிப்பாக உள்ளது. ஏசா 24:17 தேசத்தின் குடிகளே திகிலும், படுகுழியும், கண்ணியும் உங்களுக்கு நேரிடும் என்பது இப்போது கொரோனா பிணங்கள் படு ஆழத்தில் புதைக்கப்படுவதை நினைவூட்டுகிறது.

அதுமாத்திரமல்ல, எரேமியா16:4 மகாக் கொடிய வியாதிகளால் சாவார்கள் அவர்களுக்காகப் புலம்புவாருமில்லை, அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை, நிலத்தின் மேல் எருவாவார்கள். அவர்கள் பிரேதங்கள் பறவைகள், மிருகங்களுக்கு இரையாகும்; என்ற இப்பகுதி இன்றைய சூழ்நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. தொடர்ந்து வசனம் 7ல் செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படுவது இல்லை என்ற ஆச்சரியமான வசனத்தையும் பார்க்கிறோம். அப்படிப் போலவே இன்றைக்கும் மரணவீடுகளில் நடப்பதை வேதனையோடு கவனிக்கிறோம். வசனம் 9 ல் மணவாளன் மணவாட்டி சத்தம் ஓயப்பண்ணுவேன் என்றும் ஜனங்கள் ஏன் என்று கேட்டால் அவர்கள் தேவ பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், தேவனை விட்டுவிட்டார்கள் என்று கடிந்து கொள்ளப்பட்டார்கள்.

வித்தியாசமாகப் இப்போது நோய்த் தொற்றுள்ளவர்கள் இரண்டு வாரங்கள் வீடுகளில் தனிமைப்படுத்துதல் என்ற விஷயத்தைப் பார்க்கிறோம். அது போலவே ஏசா :26:20 தேவ கோபம் உன் அறைக்களுக்குள்ளே பிரவேசித்தது உன் கதவுகளை பூட்டிக்கொண்டு ஒளித்துக்கொள்: என்று காண்பது ஆச்சரிய மளிக்கிறது. அப்படியே ஆமோஸ் 8:3 ல் திரளான

பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்து விடப்படும் என்பது வடதேசங்களில் பிரேதங்களில் புதைக்காமல் நதியில் எறிந்து விடுகிறதையும் ரேஷன் கடை வரிசைப் போல பிணங்கள் இடுகாட்டில் வைக்கப்பட்டுள்ளதையும் நினைவுபடுத்தும்.

பழைய ஏற்பாடு நமக்கு போதனையாக உள்ளதை நாம் அறிவோம். ரோமர் 15:4 மற்றும் அவை நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படியும் எழுதப்பட்டிருக்கிறது (II கொரி 10:11). ஆக, இந்தக் கொள்ளை நோய்க்கு வேறு யாரோ காரணம் என்று நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. காரணம் தேசத்திற்கு ஷேமம் (சுகம்) கிடைக்க வேண்டுமானால் சபை மக்களாகிய நாம்தான் பொறுப்புள்ளவர்கள் என்று வேதம் எச்சரிக்கின்றது. வாசிப்போம் 2 நாளாகமம்; 7:14. என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

ஆக உலகம் அமைதியாக ஆரோக்கியமாக மாற வேண்டுமானால் தேவ ஜனங்களே அதற்கான பிரயாசங்களை எடுக்க வேண்டும். நாம் செய்யக்கூடிய நற்கிரியைகளில் மிகச் சிறந்தது சபைக்கூடுதல்தான் (எபி 10:24,25). ஆனால், அதை நாம் சரியாகக் கடைபிடிக்கிறோமா? என்பது தான் மில்லியன் டாலர் கேள்வி! கவனியுங்கள் ஆமோஸ் 8:6 ல் நாங்கள் டிவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்ட சாலைகளை திறக்கத்தக்க ஓய்வு நாளும் எப்போது முடியும் என்று சொல்லுகிறவர்களே என்று அந்த ஜனங்களின் அக்கிரமத்தை தேவன் கண்டித்தார். இப்போது நாம் சபை கூடி வரும்போது அது தேவ சன்னிதி என்று உணர்ந்தவர்களாய் நம் மத்தியில் கிறிஸ்துவின் சந்நிதி உண்டு என்ற பயபக்தியோடு தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்வோம் (எபி12:28). ஆகவே, சபை கூடுதல், வேத வாசிப்பு, தனி ஜெபம், சகோதர ஐக்கியம் போன்ற காரியங்களில் முன்னேறி தேவனுக்குப் பிரியமாக நடக்கப் பிரயாசப்படுவோம். தேவ தயவு நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

## நாங்கள் ஆராதிக்கிற தேவன்

சகோ. K.M. பிலிப்

நல் மீட்பர் இயேசுவின் நாமத்தில் யாவரையும் வாழ்த்துகிறேன். பிரியமானவர்களே! உலகில் பலரும் பல விதமான தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாகத் தங்களுக் கென்று ஒரு உருவத்தை உருவாக்கி அவைகளை ஆராதித்து வருகிறதைக் காண்கிறோம். ஆனால், உலகமெங்கும் ஆராதிக்கிற உயிருள்ள ஆவியாயிருக்கிற ஒரே தேவனைக் குறித்து உரத்த குரலில் **நாங்கள் ஆராதிக்கிற தேவன்** ஒருவர் உண்டு என்பதே முற்றிலும் உண்மையாகும். இப்படி ஆராதிக்கிற நம்மைக் குறித்து பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடிய காரியங்கள் அநேகம் உண்டு. நாம் தேவனுடைய பிள்ளைகள், நீதிமான்கள், உத்தமர்கள், உண்மையுள்ளவர்கள், அன்புள்ளவர்கள், பரிசுத்த வான்கள், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். மேலும் அநித்தியமான காரியங்களுக்கு அடிமைகள் ஆகாமல் நித்தியமான ஆவிக்குரிய காரியங்களைத் தெரிந்து கொண்டோம். வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, காதுகளி லிருந்தும் கேளாத, மூக்குகளிலிருந்தும் முகராத கைகள் இருந்தும் தொடாத கால்கள் இருந்தும் நடவாத தொண்டை யால் சத்தமிடவுமாட்டாத (சங்115:5-7) விக்கிரகங்களை ஆராதிக்காமல் ஜீவனுள்ள என்றும், மாறாத நம்மைக் காண்கிற, நம்மோடு பேசி உறவாடுகிற, வலது கரத்தை பிடித்து வழி நடத்துகிற ஒன்றான மெய் தேவனாகிய பரலோகப் பிதாவை ஆராதிக்க மாபெரும் வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

ஆனாலும், நம் வாழ்க்கையில் அவ்வப்பொழுது சந்திக்கின்ற சோதனைகள் குறித்து துவண்டு போகிறோம். நாம் **ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்கிற தேவனின் நித்திய வார்த்தைகளை மறந்து விடுகிறோம்.** மாறாக அவைகளை சந்திக்கும் எதிர்ப்பு சக்திகளை நாம் நம்மில் உருவாக்கிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, வியாதிகள் எல்லோரையும் தொற்றிக் கொள்வதில்லை. சாக்கடை ஓரங்களில், சுகாதாரமற்ற வீதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களை வியாதிகள் தாக்குவதில்லை. இமயமலை போன்ற பனிப்பிரதேசங்களில் தாய்நாட்டின் பாது காப்புக்காய் சுற்றித்திரியும் இராணுவ வீரர்களை, பனியோ, குளிரோ தாக்குவதில்லை. காரணம் இவர்களுடைய உடலில் நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அப்படியே தேவ பிள்ளைகளாகிய நம் வாழ்க்கையிலும்

சோதனைகளை எதிர்க்கும் எதிர்ப்பு சக்திகளை நம் இருதயங் களில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். **மனுஷன்...** தேவனு டைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான் (மத் 4:4) என்பதையும், கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்? கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப் படேன் (சங் 27:1;118:6) கர்த்தரின் நாமம் பலத்ததுருகம். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங் 16:8) போன்ற தைரியம், ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பதனால் தான் எதிர்ப்பு சக்தியை உள்ளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தேவனுடைய தாசன் எலியா ஆகாப் ராஜாவை சந்தித்த பொழுது **தான் ஆராதிக்கிற கர்த்தரே உண்மையுள்ள தெய்வம்** என்பதை நிரூபிப்பதற்கான வாய்ப்பு ஒன்று கிடைத்தது. அதன்படி பாகாலை வணங்குகிற 450 தீர்க்கதரிசிகள் ஒரு அணியாகவும், ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிற எலியா மட்டும் எதிர் அணியாகவும் நின்றார்கள். ஆளுக்கொரு பலிபீடம் கட்டி அதன் மீது விறகு களை அடுக்கி அதன்மீது ஒவ்வொரு காளையைய துண்டித்து, இப்பலியை ஏற்றுக்கொள்ளும்படி அவரவர் தெய்வத்தை நோக்கி கூப்பிட வேண்டும். அப்பொழுது வானத்தி லிருந்து அக்கினி இறங்கி யாருடைய பலியை பட்சிக்கிறதோ அவர்களுடைய தெய்வமே உண்மையான தெய்வம் என்று நிபந்தனைக்குட்பட்டு காரியங்களை செய்தனர். முதலில் 450 பேர் கொண்ட பாகாலின் தீர்க்கதரிசிகள் காலை முதல் மதியம் வரை கூப்பிட்டு, ஆடி பாடி, ஓயாமல் கூக்குரலிட்டனர். ஒன்றும் நேரிடவில்லை. சாயங்கால வேளையில் ஜீவனுள்ள ஒரே தேவனை ஆராதிக்கிற எலியா முறைப்படி காரியங்களை செய்து தேவனை நோக்கிக் கூப்பிட்டான். அப்பொழுது கர்த்தரிடத்தி லிருந்து அக்கினி இறங்கி பலிபீடத்திலுள்ள அனைத்தையும் பட்சித்துப் போட்டது. இதை கண்ட ஜனங்களெல்லாரும் **கர்த்தரே தெய்வம்** என்று ஆர்ப்பரித்தார்கள். ஆம் தேவனை உண்மையாய் ஆராதிக்கிற ஒருவரையும் அவர் வெட்கப்பட விடமாட்டார்.

தேவ பிள்ளைகளே! இக்கொடுமையான தொற்றுநோய் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுக் கொண்டிருக்கிறது. இக்காலகட்டத்தில் நம் விசுவாசத்தை உறுதிப்படுத்த தேவன்

நம்முன் நிறுத்தும் இன்னுமொரு வரலாற்றை கவனமாய் கவனிப்போம். ஒன்றான மெய்தேவனை ஆவியோடும், உண்மையோடும், முழு மனதோடும் ஆராதிக்கிற நம் வாழ்க்கையை இது உறுதிப்படுத்தும். தானியேல் – 3 ஆம் அதிகாரத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வலிபர்கள் தங்களுக்கு எதிராய் நின்ற புறஜாதியான ராஜா நேபுகாத்நேச்சாருக்கும், தங்களை சுற்றிலும் நின்ற தேவனற்ற மக்களுக்கும் முன்பாக, நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்று (3:17) உரத்த குரலில் வெளிப்படுத்திய வல்லமையான வாய் மொழியை கவனியுங்கள். அது வெறும் வாய் மொழியல்ல; அவர்கள் தங்கள் இருதயங்களில் வளர்த்துக் கொண்ட விசுவாச அறிக்கையாகும். இவர்கள் நிற்பதோ ராஜாவுக்கு முன்; மூவரும் அடிமைகள். ராஜா நிறுத்திய சிலையை வணங்காததால் எரியும் அக்கினியில் போடப்படுவது உறுதி. ஆனாலும் ராஜா, மூவரும் சிலையை வணங்க ஒரு வாய்ப்பையும் கொடுத்தார். ஆனால், ஜீவனுள்ள தேவனை மட்டும் ஆராதிப்பதில் உறுதியாயிருந்த மூவரும், நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்று திட்டமாய் கூறினார். உக்கிர கோபம் அடைந்த ராஜா மூவரையும் எரியும் அக்கினி சூளையில் போட்டார். நடந்தது என்ன? விசுவாசத்தைக் கனப்படுத்துகிற தேவன், தேவ தூதரை அனுப்பி அக்கினியில் இருந்து அவர்களைத் தப்புவித்தார். இவர்களது திடமான விசுவாச அறிக்கை, இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்று ராஜாவின் வாயிலிருந்து அறிக்கையிட வைத்தது. தேவ நாமம் மகிமைப்பட்டது.

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்..... யாதொரு விக்கிரகத்தையாகிலும் உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். (யாத் 20:3,4,5) என்ற ஜீவனும் வல்லமையுள்ள தேவ வார்த்தை அவர்கள் உள்ளத்தில் எதிர்ப்பு சக்தியாக உருவெடுத்திருந்தால் சாத்தானின் அதிகாரத்தை துணிந்து எதிர்த்து நின்று ஜெயம் பெற்றனர். அன்பானவர்களே! நாமும் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறோம். அதன் வல்லமையை, ஆசீர்வாதத்தை நாம் அனுபவித்து வருகிறோமா? நம் விசுவாச வாழ்க்கையில் இப்படிப்பட்ட கொடுமையான எதிர்ப்புகள் உண்டா? நம் பக்தியை பதம் பார்க்கும் பாதகச் செயல்கள் உண்டா? ஆராதிப்பதற்கு தடைகள்தான் உண்டா? தேவ கிருபையினால் சுதந்திர நாட்டில், இலகுவான மாநிலத்தில், சுயமாக, சுதந்திரமாக வாழும் வாழ்க்கை கிடைத்தும் தேவனை ஆராதிப்பதில்

ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்கிறோமா? தொழுகையின் வல்லமை நம் விசுவாச வாழ்க்கையை பலப்படுத்தி யுள்ளதா? நாங்கள் ஆராதிக்கிற தேவன் என்ற பலமான விசு வாசத்தை தைரியமாய் அறிக்கையிட முடியுமா? ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிற வர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத் தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:28).

**நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் என்று மூவரும் வீர முழக்கமிட்டதில் ஆராதனையைக் குறித்த உயர்வான மன நிலையைப் புரிந்து கொள்வோம். வாரத்தின் முதல் நாளில் நாமும் கூடி ஆராதிக்கிறோம். ஆனால், அதன் மேன்மையை அனுபவிக்கிறோமா? நாம் ஆராதிக்கும்போது நம் மன நிலை எப்படியுள்ளது? முதலாவது, ஆராதனை தேவனுக்குரியது; அவரே சகலத்தையும் சிருஷ்டித்தவர் (வெளி 4:11); மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஆராதனை செய்ய வேண்டும் (100:2); நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (எபி 12:28) என்ற மனநிலையில் ஆராதிக்க வேண்டும். ஆராதனைக்குக் கூடும்பொழுது சரீரப் பிரகாரமன அலங்காரத்தில் அதிக கவனம் செலுத்தாமல் பரிசுத்த அலங்காரத்துடனே** நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்க வேண்டும் (I **தீமோத்தேயு** 2:9). அதாவது ஆவியோடும், உண்மையோடும் (சத்தியத்தின்படி), (யோ 4:24) ஆவியோடும் கருத்தோடும் பெருமைக்கு இடங்கொடாமல் மனத்தாழ்மையோடும் (யாக் 4:10), நல்லொழுக்கமாயும், கிரமமாயும் (1கொ 14:46) ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து.... புத்தியுள்ள ஆராதனை செய்ய வேண்டும் (ரோ 12:1). உண்மையோடு தொழ வேண்டும் என்று வேதம் வலியுறுத்து கிறதென்றால், உண்மையற்ற தொழுகை உண்டு என்பதையும் நாம் அறிய வேண்டும். ஒரு கூட்டம் துணிகரமாய் இயேசுவின் நாமத்தை பயன்படுத்தி சிருஷ்டிகரை தொழுது கொள்ளாமல், சிருஷ்டியைத் தொழுது (ரோ 1:25) சேவிக் கிறார்கள். மற்றொரு கூட்டம் தங்களுக்குப் பிரியமானதை அல்லது மக்கள் விரும்புவதை ஆராதனை என்ற பெயரில் ஆட்டம், கொண்டா ட்டம், பரவசம் என்று ஒரு காட்சியாக பொழுதுபோக்காக, சுய விளம்பரத்தை பறை சாற்றுவதாக அமை கிறது. ஆராதனை பற்றி நமக்குச் சரியான மனப்பான்மையை வேதம் தெளிவாய் கற்றுக் கொடுத்திருக்கிறது. **பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும்** (1 நா 16:29)

அன்பானவர்களே! ஆராதிப்பதில் இஸ்ரவேலர்களுக்கு வாரத்தின் [கடைசி நாள்]. ஆனால் ஆவிக்குரிய நமக்கோ தேவன் வாரத்தின் முதல் நாளைக் கொடுத்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராச்சியத்தை தேடும்பொழுது அவ்வாரம் முழுவதும் ஆசீர்வாதம் கூடக் கிடைக்கும் அரிய வாய்ப்பை பெற்றுள்ளோம். ஆராதனை சடங்கல்ல, சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று தேவ சந்நிதியில் தாழ்மையுள்ள இருதயத்தோடு மனப்பூர்வமாய் ஏறெடுக்கப்பட வேண்டும். இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளில் என்னை கனம் பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது. [மத் 15:8] என்ற மனநிலையை முற்றிலும் அகற்றிப் போடுவோம். ஆராதனை துவக்க முதல் நிறைவடையும் வரை நம் மனதை ஒருமுகப்படுத்துவோம். உண்மையில் நாம் பெலவீனர்கள், குறைவுள்ளவர்கள், கவலை, துக்கம் உடையவர்கள். ஆனாலும் சேனைகளின் கர்த்தாவே உம்முடைய வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனுமுமாய் இருக்கிறது என்று [சங் 84:1,2] ஆராதனைக்கு நாடி, தேடி வாருங்கள். தேவ சமூகத்தில் ஆனந்த சத்தத்தோடே கெம்பீரமாய் துதித்துப் பாடுங்கள். உங்கள் கவலை துக்கம் பறந்துபோகும்ஜெபத்தில் கேளுங்கள் பெலன் கொடுப்பார். உதாரத்துவமாய் கொடுங்கள், உங்கள் குறைவுகள் நிறைவாகக் கொடுக்கப்படும். கிறிஸ்துவின் புதிய உடன் படிக்கையாகிய கர்த்தருடைய பந்தியில் உங்களை நீங்களே நிதானித்து பங்கு பெறுங்கள்; பரிசுத்தமாகி நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வீர்கள். ஜீவனும், வல்லமையும் நிறைந்த தேவ ஆலோசனைகளைக் கேளுங்கள். வாழ்க்கையில் வளம் பெறுவீர்கள். இப்பொழுது சொல்வோம், **நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்!** ஆமென்.

✝

---

**நாளை உதிரும் மலருக்கே**

**வர்ணம் தீட்டும் நம் தேவன்**

**நித்தியமாய் அவரோடு வாழப்போகும் நம்மை**

**நிர்க்தியாய் விட்டு விடுவார் என நினைக்கலாமா?**